அணையை 15 அடி உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? அதைப்போல செங்கோட்டைக்கு அருகிலே ஹரிஹரா நதியென்று இருக்கிறது. அதன் படுகையில் 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்' மிக அதிகமாக இருக்கிறது. செங்கோட்டை ரெயில்வே நிலையத்திற்கு அங்கே யிருந்து தண்ணீர் எடுத்து வாகன்களையெல்லாம் கழுவுகிற வேலைகளையெல்லாம் செய்கிறார்கள். அந்த ஹரிஹரா நதியிலிருந்து தண்ணீர் எடுத்து செங்கோட்டை நகருக்கு மட்டுமல்லாமல் தென்காசிக்கு கூட தண்ணீர் வழங்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு அதுகுறித்தும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆய்வு செய்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

திரு. தெ. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சாம்பவார் வடகரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 29 லட்சம் ரூபாய் ஒதுக்கி அங்கே இருக்கின்ற மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அடிக்கல் நாட்டினார்கள். அந்த வேலை இன்னும் துவங்கப்படாமல் இருக்கிறது. எப்போது துவங்கப்படும், எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது உலக வங்கியின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு இருக்கிற திட்டம். நீர் ஆதாரம் குறித்து சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. அவைகளைச் சீர் செய்ததற்குப் பிறகு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

651—(*வினா எண். 3593) திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆனைகட்டியில் உள்ள ஆதிவாசிகள் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1986 மே 5]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆனைகட்டியில் உள்ள ஆதிவாசிகள் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, வன இலாக்கா தன்னுடைய பகுதிக்குள் குழாய்களை பதிக்கக்கூடாது என்ற தடையை விதிப்பது இதுபோன்ற மலைப் பகுதிகளில் நம்முடைய குடிநீர் பணிகளை நிறைவேற்றுவதை தடைப்படுத்துவதாக இருக்கிறது. எனவே அதை போக்குவதற்கு, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், வன இலாக்காவினுடைய அங்கீகாரம் அனுமதி தேவையில்லை என்கிற உத்தரவாதத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட சிக்கல் எதுவும் இல்லை. அது வகை மூன்றைச் சார்ந்த குடியிருப்பு, அதனுடைய மக்கள் தொகை 100. இதனை மூன்றாம் தரத்திலிருந்து மாற்றுவதற்கும் ஒரு ஆதாரக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற, வனத் துறையினுடைய அனுமதி பெறாமலேயே குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்வது என்பது கொள்கைப் பிரச்சனை. இப்போது பதில் சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 652 முதல் 656 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.